# வவுனியாவில் இராணுவ நடவடிக்கை நிறுத்தம்!

(கொழும்பு)
வவுனியா மாவட்டத்தில் கடந்த 11 நாட்களாக இடம் பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கை, நேற்று மாலை யுடன் முடிவுக்கு வந்துவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்தது.
இந்நடவடிக்கையின்போது,
[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 66 சித்திரை 31 ஷவ்வால் 28 இதழ்: 93
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-5-1991

## யாழ். போதனா வைத்தியசாலை ஜெனரேட்டர் பழுதடைந்தது

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்திய சாலையில் மின்சாரத்தை வழங்கி வந்த ஜெனரேட்டர் களில் ஒன்றான 50 கே. வி.
(4-ம் பக்கம் பார்க்க)

## மடு கோயில் அகதி முகாமுக்கு உணவுப் பொருட்கள் விரைவில் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)
பதினைந்து லொறிகள் மூலம் அனுராதபுரத்தில் இருந்து உணவுப்பொருட்கள் மடுக் கோயில் அகதிகள் முகாமுக் களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் விரைவில் எடுத்து வரப்படவிருப்பதாக கூறப்படு கிறது
(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சனையைத் தீர்க்க விரைவில் பொதுத்தேர்தல்?

## மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று அரசியல் அமைப்பை திருத்தவும் வாய்ப்பு

(பாரிஸ்)
அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ.தே.க. அமோக வெற்றிபெற்றதனையடுத்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்தலாமென்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நாடாளுமன்றத் தேர்தலை இடையில் நடத்த விரும்ப மாட்டார் என்றாலும் இத் தேர்தல் வெற்றி மூலம் அவர் தமது கட்சியில் தமக்கு இருந்த எதிர்ப்புக்களைச் சமாளிக்கக்கூடும் எனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தற்போதைய நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாதிருப்பதால் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளையே நம்பியிருந்தது.

இதனால் தற்போது நாடாளுமன்றத் தேர்தலை மீண்டும் நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை இடங்களைப் பெறுமளவுக்கு ஆளும்கட்சி அமோக வெற்றி பெற்றால் அதன் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமென ஜனாதிபதி திரு. பிரேமதாஸா
(4-ம் பக்கம் பார்க்க)

## பென்சன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்: செயலக ஓய்வூதிய கிளையினால் ஏப்ரல் மாதசிவில் பென்சன் வவுச்சர்களும், ஏப்ரல் மாத ரயில்வே பென்சன் வவுச்சர்களும் நேற்று முதல் தபாலில் சேர்க்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. வின் வெற்றியால் சுதந்திரக்கட்சி அதிர்ச்சி!

[கொழும்பு]
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ. தே க.வின் வெற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இத்தேர்தல் வெற்றி மூலம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அசைக்க முடியாத செல்வாக்குள்ளவராகியிருக்கிறார்.

ஐ தே. கவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிகரான மாற்றுக் கட்சியல்ல என்ற தோற்றத்தை இத்தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [ரி]

## தேர்தல் முறைகேடு பற்றி அவதானிகள் குழு கவனிப்பு

(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக பிரிட்டிஷ் தூதர் தெரிவித்த புகாரை சர்வதேச அவதானிகள் குழு' கவனத்தில் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தூதரின் நேரடிப் புகார் இவ்விடயத்தில்பாரதூரமாக அமைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தேர்தல் நடவடிக்கை குறித்து இங்குவந்த சர்வதேச அவதானிகள் குழுவின்
[4-ம் பக்கம் பார்க்க]

## இன்று சர்வகட்சி மாநாடு

## அதிகாரப் பரவலாக்கல் பற்றி முக்கிய முடிவு அறிவிக்கப்படும்

[கொழும்பு]
அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான முக்கிய முடிவொன்று இன்று ஆரம்பமாகும் 'சர்வகட்சி மாநாட்டில்' அறிவிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வடக்கு- கிழக்கிற்கான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று 14ம் திகதி ஆரம்பமாகும் 'சர்வகட்சி மாநாடு' 16ம் 17ம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-சி)

## படையினரால் கைது

(திருமலை)
கட்டைபறிச்சானிலிருந்து மூதூருக்கு கடந்த 12ம் திகதி காலை 9 மணியளவில் வந்துகொண்டிருந்த இரு தமிழ் பொதுமக்கள் கட்டைபறிச்சான் இராணுவத்தினரால் இறால் பாலத்தடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு
(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு 1500 குடிசைகள் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு 1,500 குடிசைகள் வெகு விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

நாவற்குழி, கைதடி. அரியாலை, காக்கைதீவு ஆகிய இடங்களில் மேற்படி அகதிகளுக்கான தங்கியிருக்கும் குடிசைகள் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரியாலை. நாவற்குழிஆகிய இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அகதிகள்தங்கியிருப்பதற்கான குடிசைகளை அமைக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. (153)

## உதவி அரச அதிபர்களாக ஐவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் பதவிக்கான வெற்றிடங்களுக்குப் புதிதாக ஐந்து பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகம், இலங்கை நிரு
(4-ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் தபால்கள் தேக்கம்

(மாங்குளம்)
மன்னார்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த உள்ளூர் வாசிகளின் பெருந்தொகையான வெளிநாட்டு உள்நாட்டு கடிதங்கள் மன்னாரில் தேங்கிக் கிடப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்தில் சீர்
[4-ம் பக்கம் பார்க்க]

## அவ்ரோ விமானத்திலிருந்து 15 பீப்பா குண்டு வீச்சு!

(ஆனையிறவு]
ஆனையிறவு இராணுவ முகாமை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஸ்ரீலங்கா
(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழில் திணைக்கள
# ஊழியர் சம்பளம் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

கடற்றொழில் திணைக்கள ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படவில்லை.

வடமராட்சியில் ஊழியம் செய்யும் மேற்படி தொழிலாளர்களின் ஊதியப்பணம் கடந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்கள் வழங்கப்படவில்லையாம்.

ஆனால் பெப்ரவரி மாதத்துக்கான சம்பளம் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத் தடையால் பாதிப்புற்றிருக்கும் மேற்படி உத்தியோகத்தர்கள், பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

## காங்கேசன்துறை
# சுற்றுடல் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை இராணுவ முகாம் சுற்றுடலில் இருந்து வெளியேறிய அகதிகளுக்கு இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண பொருட்கள் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என கவலை தெரிவிக்கப்படுகிறது.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பதினால் பலாலி இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் வாழ்ந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கடந்த மாதம் 13ம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில்வைத்து நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

ஆனால் காங்கேசன்துறை இராணுவ முகாமை அண்டிய பகுதிகளான காங்கேசன்துறை மாவிட்டபுரம், வீமன்காமம், கொல்லங்கலட்டி, கீரிமலை போன்ற பகுதிகளிலிருந்து ஜூன் 1990ல் வெளியேறியமக்களுக்கு இதுவரை மேற்படி நிறுவனங்களால் நிவாரணப் பொருட்கள் எதுவும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. [86]

## வரிவிளம்பரம்

### தேவை

இலுப்பம் விதை, வேப்பம் விதை தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். (சி 1299)

### லண்டன் பரீட்சை

CIMA., I.D.P.M; A.A.T, I.A.B, Computer - Basic வகுப்புகள் 18-05-91 முதல் சிறந்த விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படும். School of Business Administration, 16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி 4725)

### தவறிவிட்டது

சிவசம்பு சிவனேசன் காரை நகர் என்பவருடைய அடையாள அட்டை பிறவுண்றோட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். எஸ். சுப்பிரமணியம், இல. 3/1, பிறவுண் றோட், முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி 4729)

## கண்ணாடி பிறேம் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

பெரியகடை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் கந்தர்மடத்தை சேர்ந்த ந. தேவராஜ் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி (பிறேம் மட்டும்) ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## முதலுதவிப் படையினர்
# அகதி முகாம்களை பராமரிக்க வேண்டும்

[காங்கேசன்துறை]

"முதலுதவிப் படையில் உள்ளவர்கள் முதலுதவியில் மட்டும் கவனம் செலுத்தாமல் இன்றைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு மக்களின் அடிப்படை சுகாதார தேவைகளை நிறைவேற்றிவைப்பதிலும் அகதிமுகாம்கள் தற்காலிக இருப்பிடங்களை பராமரிப்பதிலும் ஈடுபடவேண்டும்"

இவ்வாறு சென் ஜோன்ஸ்அம்புலன்ஸ் முதலுதவித் தொண்டர்களுக்கான ஒரு வாரகால பயிற்சிப்பாசறையில் கலந்து சுகாதார செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி உரையாற்றிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் குறிப்பிட்டார்.

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் நடந்த இப் பயிற்சிப் பாசறையில் வலிவடக்குப்பகுதியைச் சேர்ந்த 40 முதலுதவி தொண்டர்கள் பங்குபற்றினர்.

சுகாதார கல்விப்போதனாசிரியர் திரு. கே. வைத்தீஸ்வரன், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. கே. இங்கராஜா, உணவு மருந்து பரிசோதகர் திரு ரி. மகாதேவன் உட்பட பல சுகாதார உத்தியோகத்தர்களும் பயிற்சியாளர்களுக்கு போதனை அளித்தனர். [86]

## வேம்படி மகளிர் கல்லூரி
# புனருத்தாரண நிதிக்கு உதவுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போர் நடவடிக்கைகளினால் அழிந்தொழிந்துவிட்ட வேம்படி மகளிர் கல்லூரியை புனரமைக்க உதவுமாறு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

வட மாநிலத்தின் மாணவியருக்குள்ள ஒரேயொரு தேசியப் பாடசாலையாக உள்ள வேம்படி மகளிர் கல்லூரியின் 70 சதவீதமான கட்டடங்களும், அவற்றின் உபகரணங்கள் யாவும் அண்மைக்கால போர் நடவடிக்கைகளால் அழிந்தொழிந்துவிட்டன. இதனால் நூற்றுக்கணக்கான மாணவிகள் இடிபாடுகளின் மத்தியிலும், ஆபத்தான சூழலிலும், வானம்பார்த்த கட்டடங்களிலும் தமது படிப்பைத் தொடருகின்றனர்.

படிப்பில் இம் மாணவருக்குள்ள ஆர்வத்துக்கு உதவியாக இருக்கவேண்டியது வேம்படி பழைய மாணவர்களின் முதன்மையான கடமையாகும். இதனாலேயே வேம்படி பழைய மாணவர் சங்கம் பாடசாலைப் புனருத்தாரண நிதியை ஆரம்பித்துள்ளது. வேம்படி பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் கூடுதலான நிதியை வழங்கி வேம்படி மகளிர் கல்லூரியின் அவசிய புனருத்தாரணவேலை செய்வதற்கு உதவுமாறு வேம்படி பழைய மாணவர் சங்கம் கேட்டுள்ளது. (ரி)

## செஞ்சிலுவைச் சங்கத்தினர்
# இரத்ததானம் வழங்கினார்கள்!

(புலோலி)

பருத்தித்துறை [மந்திகை] அரசினர் ஆதார வைத்தியசாலையில் செஞ்சிலுவைத் தொண்டர்கள் நேற்று முன் தினம் இரத்ததானம் செய்தனர்.

செஞ்சிலுவைச் சங்க செம்பிறை தினத்தைக் கொண்டாடு முகமாக பருத்தித்துறை கரவெட்டிப்பகுதியைச்சேர்ந்த செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்கள் சுமார் 13 பேர் இந்த இரத்ததானத்தைச் செய்தனர்.

இரத்தத்தை சேமிக்க வசதியின்மையால் இரத்ததானம் செய்ய முன்வந்த ஏனைய செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களிடமிருந்து பின்னர் தேவைக்கேற்ப இரத்ததானம் பெறப்படும். இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (61)

## கொம்பியூட்டர் வகுப்புகள்

(15-05-91) நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது. விளக்கங்கள் தமிழிலும் தரப்படும். O/L & A/L இருபாலரும சேரலாம்.

**விளைல்ஸ் கல்வி நிலையம்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
(சி 4727)

## இராசி பலன்

14-05-1991
செவ்வாய்க்கிழமை

அமாவாசை மு. ப. 10-57 வரை, பரணி காலை6-37வரை. கார்த்திகை வைகறை 5-17 வரை, இராகுகாலம் பகல் 2-23 முதல் 3-53வரை, சுப நேரம் 10-23 முதல் 11-53 வரை.

மேடம்: பெரியோர் ஆசி, தொழில் பலிதம், குடும்ப உல்லாசம்.

இடபம்: வாக்குவாதம், மன நிலை மாற்றம், தொழில் நட்டம்.

மிதுனம்: பணியால் சகாயம், வாக்குவன்மை, சகோதர உதவி.

கடகம்: பயணங்களால் அனுகூலம், மாமியார் தொல்லை, பயம்.

சிங்கம்: தொழில் தகராறு, கடன் சுமை, குடும்பக்கஷ்டம்.

கன்னி: வீண்பகை, அரசியல் தலையீடு, குடும்பச் செலவு, மனச்சுமை.

துலாம்: மனவிருப்பு, தெய்வ தரிசனம், தானதர்மம்.

விருச்சிகம்: காரியச் சித்தி, புதியஸ்தானம், குடும்பசுகம்.

தனுசு: தொழில்சிக்கல், மன வேதனை, அதிக பிரயாசம்.

மகரம்: கண்ணில் ரோகம், அற்பர்நேசம், காரியத்தடை.

கும்பம்: வாக்குவசீகரம், புதியஸ்தானம், பணவரவு

மீனம்: மனவேதனம், அறிஞர் சந்திப்பு, கடமை தவறுதல்.

ஜோஸ்யர்

## விபரம் சேகரிப்பு

(பூநகரி)

பூநகரி அரசாங்க அதிபர் பிரிவுக்கு தீவுப்பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வந்தோர் பூநகரியில் அந்தந்தப்பகுதி கிராம சேவையாளரிடம் தமது விபரங்களை தெரிவிக்குமாறு பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கனகரத்தினம் அறிவித்துள்ளார். (23)

## தடுப்பூசி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கு தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

அதிகரித்த வெப்பம் காரணமாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கோழித் தூக்க நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இங்குள்ள வைத்தியர்களால் ஏற்றப்படும் இம் மருந்தை நூற்றுக் கணக்கானவர்கள் தங்கள் கோழிகளைக் கொண்டு வந்து ஏற்றிச் செல்கின்றனர். (71)

## இன்று

[நாவற்குழி]

கடந்த 4ம் திகதி வல்வைக் கடலில் நிலைகொண்டிருந்த கப்பலைத் தகர்த்த கடற்கரும் புலிகள் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரின் 11ம் நாள்எழுச்சி நினைவஞ்சலி இன்று செவ்வாய் மாலை 6-00 மணிக்கு நுணுவில் சரஸ்வதி வித்தியாசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காமம் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று இரவு சுவாமி வீதி உலாவருவார்.

27ம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

## நோயாளர் தொகை அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் வெளிநோயாளர்கள் தொகைமிகவும் அதிகரித்துள்ளது. காரைநகர் மற்றும் தீவுப்பகுதிகளைச்சேர்ந்த இடம்பெயர்ந்த அகதிகளும் இந்த வைத்தியசாலையையே சிகிச்சைக்காக நாடிவருகின்றனர்.

இதேவேளை நோயாளர் தொகை மிகவும் அதிகரித்ததினால் இவ்வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## தசாக அழைப்பு

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் சித்திரை மாதம் 23-ம் நாள் (06-05-91) சிவபதமடைந்த எனது தர்மபத்தினி

## ந. யோகாம்பாள்

அவர்களின் தசாகாதி கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன:

வைகாசி 1-ம் நாள் (15-5-91) புதன் காலை 10 மணி தசாகம்

,, 2-ம் நாள் (16 5-91) வியாழன் ஏகோதிட்டம், மாசிகம்,

,, 3-ம் நாள் (17-5-91) வெள்ளி சபிண்டீகரணம்

,, 4-ம் நாள் (18-5-91) சனி காலை 10 மணி நவக்கிரக ஹோமம், கிருஹயஞ்ஞம்.

உறவினர்களையும் நண்பர்களையும் இவ்வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறுகேட்டுக்கொள்ளுகிறோம்.

நாட்டின் சீரற்ற நிலைமையினால் ஏற்பட்ட பல்வேறு இடையூறுகள் காரணமாகத் தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்கமுடியவில்லையென மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நன்றி.

இவ்வண்ணம்
சோ. நடராஜக் குருக்கள்
(பிரதமகுரு ஐயனார் தேவஸ்தானம், சுருவில்.)

22, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4726)

# ★ அரசியல் கட்சிகளும் பல்வேறு அணிகளும்

இந்த நாட்டை ஆளவும் தமிழகத்தை நிர்வகிக்கவும் தகுந்தவர் யார் என்றும் மக்கள் அடையாளம் காட்ட இன்னும் 12 நாட்களே உள்ள நிலையில் அனல் பறக்கும் பிரசாரம் எதிர்வரும் நாட்களில் இடம் பெறும்.

பலமுனைப்போட்டி காணப்படும் இந்த தேர்தலில் அரசியல் கட்சிகள் பல்வேறு வியூகங்களை கூட்டணிவாயிலாக அமைத்து போட்டியிடுகின்றன.

## இருமுனைப்போட்டி

சென்ற சட்டபேரவைத் தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் நான்கு முனையாக போட்டியிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் இம்முறை இருமுனையாக போட்டியிடுகின்றன

தி மு. க கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தற்போது இணைந்து போட்டியிடுகிறது. சென்றமுறை இக்கட்சி செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வுடன் இணைந்து போட்டியிட்டது.

## 3 அணிகள் ஒன்றுக

சென்ற தேர்தலில் தனித்தனியாக போட்டியிட்ட 3 அணிகளான காங்கிரஸ் அ. தி. மு. க. ஜானகி அணி, அ.தி.மு.க. ஜெயலலிதா அணி இம்முறை ஒரே கூட்டணியாக களத்தில் உள்ளன.

சென்ற தேர்தலில் காங்கிரஸ் அணியில் அங்கம் வகித்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சமத் பிரிவு இம்முறை பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது.

அ. தி. மு. க ஜானகி அணியுடன் சென்ற தேர்தலில் இணைந்து போட்டியிட்ட தமிழக முன்னேற்ற முன்னணி இத்தேர்தலில் தி. மு. க. அணியுடன் சேர்ந்து போட்டியிடும் ஜனதா தள் கட்சியுடன் இணைந்து விட்டது.

## பதினொன்கு கட்சிகள்

இதேபோல சென்ற சட்டபேரவை தேர்தலில் ஜெயலலிதா அணியுடன் சேர்ந்து போட்டியிட்ட தமிழ் நாடு ஜனதா கட்சி இத்தேர்தலில் சமாஜவாதி ஜனதா கட்சியாக 14 கட்சிகளின் தோழமையுடன் போட்டியிடுகிறது.

சென்ற தேர்தலில் காங்கிரஸ் உடன் இணைந்து போட்டியிட்ட டாக்டர் அம்பேத்கர் மக்கள் இயக்கம் இம்முறை பாரதீய ஜனதா கட்சியுடன் இணைந்து போட்டியிடுகிறது. இத்தேர்தலில் முதல் முறையாக பாட்டாளி மக்கள் கட்சி தேர்தல் ஆணையகத்தால் அங்கீகாரம் பெற்ற மாநில கட்சியாக களத்தில் குதித்துள்ளது.

## திருநாவுக்கரசு அணி

அ. தி. மு. க. ஜெயலலிதா அணியிலிருந்து வெளியேறிய திருநாவுக்கரசு அணி இம்முறை அண்ணா புரட்சி தலைவர் தமிழக முன்னேற்ற கழகம் என்ற புதிய கட்சி அமைத்து தி. மு. க. அணியுடன் இணைந்து தேர்தலை சந்திக்கிறது.

## தமிழ்நாடு தேர்தல்களம்

மார்க்சிஸ்ட் கம்யூனிட் கட்சி ஜனதா தள், முஸ்லிம் லீக் லத்திப் பிரிவு ஆகியவை சென்ற முறை இணைந்து போட்டியிட்ட தி மு. க கூட்டணியிலேயே இம்முறையும் இணைந்து போட்டியிடுகின்றன.

## காங்கிரஸுடன் இணைந்து

இது போலவே இந்திய ஐக்கிய பொதுவுடமை கட்சி காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து இம்முறை போட்டியிடுகிறது.

சென்றமுறை அ. தி. மு. க. ஜானகி அணி வேட்பாளராக போட்டியிட்டவர்களில் வெற்றிபெற்ற ஒரே வேட்பாளரான முன்னாள் சட்டபேரவைத் தலைவர் இம்முறை தி. மு. க ஆதரவு பெற்று சுயேச்சை வேட்பாளராக தமது சொந்த தொகுதியான சேரன்மாதேவியில் மீண்டும் போட்டியிடுகிறார்.

**தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காத சிலர் சுயேட்சை வேட்பாளர்களாக களத்தில் குதித்துள்ளனர்**

தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்ட சிலர் போட்டி வேட்பாளராக களத்தில் குதித்துள்ளனர். வேறு சிலர் சுயேட்சை வேட்பாளராக தங்கள் ஆதரவாளர்களை பெருவாரியாக நிறுத்தியுள்ளனர். சென்றமுறை திருப்பத்தூர் தொகுதியில் அ.தி.மு.க. ஜானகி அணியில் போட்டியிட்ட முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இத்தொகுதியிலும் சிவகாசி மக்கள் அவை தொகுதியிலும் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகிறார்.

## சுயேட்சை வேட்பாளர்கள்

அறவர்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் பெரும்பாலான சுயேட்சைவேட்பாளர்கள். அ. தி. மு. க. வை சேர்ந்த அத்தொகுதியிலுள்ள முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவரின் தூண்டுதலின்பேரில் நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

மாநிலத்திலேயே அதிகவேட்பாளர் போட்டியிடும் பள்ளிப்பட்டு தொகுதியில் நிற்கும் சுயேட்சை வேட்பாளர்களில் பெரும்பாலானோர் விசைத்தறி ஆலைகளுக்கு அரசு போதிய உதவி செய்யவில்லை என்று கூறி எதிர்ப்பை தெரிவிப்பதற்காகப் போட்டியிடுகிறார்கள்.

இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததினால் தி. மு. க. முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. கே. சீனிவாசன் தி. மு. க. விலிருந்து விலகிவிட்டார். தமிழ்நாட்டின் 10வது சட்டப் பேரவைத்தேர்தலில் 28மாதத்தின் பின்பும் 10வது மக்களவை தேர்தல் 15 மாதத்தின் பின்பும் நடக்கும் இந்த குறுகிய கால இடைவெளியில் நடத்தப்படும் தேர்தல் பிரசாரம் இதுவரை தமிழ்நாட்டில் விறுவிறுப்பாக இல்லை என்றே கூறலாம்.

வேட்பாளரும் தேர்தல் செலவுகருதி சுருக்கமான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

வாக்காளர்களும், சட்டபேரவையும் மக்களவையும் குறிப்பிட்ட 5 ஆண்டு பகுதி காலப்பிற்குமுன் கலைக்கப்பட்டுவிட்டதால் இத்தேர்தலில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலைமைபற்றி முடிவு எடுப்பதில் இன்னமும் குழப்ப நிலையில் உள்ளதாக தோன்றுகிறது.

கடும் வெய்யில் தேர்தல் பிரசாரத்தை அனல்பறக்கும் பிரசாரமாக மாற்றுவதற்கு தடையாக உள்ளது. அரசியல் தலைவர்களும் இந்த வெப்ப நிலையை அனுசரித்து இரவு நேரம் முழுவதும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ★ இந்திய தேர்தல்

# தேர்தல் கடமையில் ஈடுபட ஒன்றரைக்கோடி பொலிஸார்

(புதுடில்லி)

இந்தியப் பொதுத்தேர்தலில் சுமார் ஒன்றரைக்கோடி பொலிஸாரும், ஒன்றே கால் லட்சம் ஊர்காவல்படையினரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவை அனைத்தும் உட்பட 'பரா' இராணுவத்தையும் உள்ளடக்கி 500 படைப்பிரிவுகள் தேர்தல்கடமையில்செயற்படவுள்ளது.

நாடுமுழுவதிலும் பதட்டமான வாக்குச் சாவடிக்கும் நிலையங்கள் என கருதப்படும் 25,000 வாக்களிப்பு நிலையங்களில் பலத்த பாதுகாப்பு போடப்படவுள்ளது. மற்றும் அஸாம், பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத் மாநிலங்களில் மேலதிக 'பரா' துருப்புகளும் நிறுத்தப்படவுள்ளன.

மலைப் பிரதேசங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகளுடன் அதிகாரிகள் ஹெலிகொப்டர்கள் மூலம் அனுப்பப்படவுள்ளனர்.

தேர்தலின்போது வன்முறைகள் ஏற்படுமானால் அதனைத் தடுக்கும் நடவடிக்கை குறித்த பயிற்சி பொலிசாருக்கும், ஏனைய படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. [சி]

# சின்னமடுவில் கடும் மோதல்: 10 படையினர் பலி

## ஆயுதங்களும் மீட்பு

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை சின்னமடுப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்தாக்குதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றி, இராணுவத்தினரின் தற்காலிக முகாம்களையும், காவல் அரண்களையும், புலிகள் நிர்முலமாக்கினார்கள்.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் சின்னமடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தேடிச்சென்று மேற்படி தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 10இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுடன் வேளாங்கண்ணி மாதா கோவில் பக்கமாக தப்பி ஓடியதைக் காணக்கூடியதாக இருந்ததாம். இராணுவத்திடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே. எல். எம். ஜி 1, அதற்குரிய மகஸின் – 1 லிங்-75, ரி 56-2 துப்பாக்கிகள்-6, அதற்குரிய மகஸீன்-13, ரி 56.-1 துப்பாக்கிகள்-2, ஜே. ஆர். கைக்குண்டு-8, நடுத்தர ரவைகள்-3000, ஏ. கே. ஹோல்சர் -7, குண்டுதுளைக்காத கவசம் -1, இராணுவப் பைகள்-4, தண்ணீர் போத்தல்-3.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் காப்டன் சுந்தர் (அடைக்கலம் அமிர்தநாதன்-10ம் வட்டாரம் நெடுந்தீவு) வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த கப்டன் சுந்தரின் புகழுடம்பும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் நேற்றுக் காலை நாவாந்துறை சென். நீக்கிலஸ்மண்டபத்தில் மக்களின் பார்வைக்காகவைக்கப்பட்டது.

காப். சுந்தரின் புகழுடம்புக்கு, பெருந்தொகையான மக்களும் பாடசாலை மாணவர்களும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்கள்.

பின்பு இம் மாவீரனின் புகழுடம்பு இராணுவ மரியாதையுடன் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டது. (வி)

# கட்சி மோதல்: 35 பேர் பலி!

[ஜொஹனஸ்பேக்]

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் அல்லாத இரு இனத்தவர்களிடையே இடம்பெற்ற கடும் மோதலில் 35 பேர் கொல்லப்பட்டனர்; 50 பேர் வரை காயமடைந்தனர்.

கட்சி வேறுபாடே இந்த மோதலுக்கு காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது; ஆதரவாளர் சிலர் தாக்கப்பட்டதையடுத்து இம்மோதல் நடைபெற்றது.

உடனடியாக பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்த போதும் கடும் தாக்குதலுக்கிலக்காகி 35 பேர் பலியாகிவிட்டனர். [வி]

## உதைபந்தாட்ட புதிய விதிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், மத்தியஸ்தர்களுக்கான விரிவுரை ஒன்றை எதிர்வரும் வியாழக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பிற்பகல் 4 மணிக்கு நிகழ்த்தவுள்ளது.

உதைபந்தாட்டப் போட்டியில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சட்ட விதிகள் பற்றிய விளக்கத்தை இச்சங்கத்தின் தலைவர் திரு. கே. மதுகுலசிங் அளிப்பார் என செயலாளர் திரு. ஏ. தேவராசா தெரிவித்தார். (வி)

# சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

தொல்புரம் கமலச்சேவை நிலைய பிரதேசத்திலுள்ள விவசாயிகள் தாங்கள் மேற்கொள்ளும் சின்ன வெங்காயம், பம்பாய் வெங்காயம் ஆகியவற்றின் செய்கைக்கு குறையாத வகையில் சிறுதானிய உற்பத்தியிலும் ஈடுபடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக விவசாயி ஒருவர் ஐந்து பரப்புக்காணியில் நீர் பாய்ச்சுதல் மூலம் வெங்காயச் செய்கையை மேற்கொள்ளும் பட்சத்தில் அந்த விவசாயி ஐந்து பரப்புக்கு குறையாத விதத்தில் சிறுதானிய உற்பத்தியிலும் ஈடுபடவேண்டியது அவசியம் என்று தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார். (72)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் இம்மாதம் 17ம் திகதி காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில் யாழ். மாவட்ட பதில்அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [153]

## தவறுதலாக விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருக்கையில் தவறுதலாக பண்ணைப் பாலத்தில் தவறி கடலில் வீழ்ந்த சகோதரியைக் காப்பாற்றுமுகமாக குதித்த சகோதரனும் காயங்களுக்குள்ளாகியும், சகோதரி மூர்ச்சித்த நிலையிலும் யாழ் போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப்பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் பண்ணைப்பாலத்தடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச்சேர்ந்த செல்வி கலா சின்னத்துரை (வயது 17) செல்வன் சின்னத்துரை குணேஸ்வரன் (வயது 20) ஆகியோரே சிகிச்சைபெற்றுவருபவர்களாவர். [56]

# முதலாம்தர கணக்காளராக பதவி உயர்வு

[யாழ்ப்பாணம்]

இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த இருபது கணக்காளர்கள் அண்மையில் முதலாம் தர கணக்காளர்களாக நிதி அமைச்சினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த இருபது கணக்காளர்களில் திரு. கே. இராஜநாயகம், திரு. பி. மரியாம்பிள்ளை ஆகிய இருவர் மட்டுமே தமிழர்களாவர் மிகுதி பதினெட்டு கணக்காளர்களும் சிங்களவர்களாவர்.

திரு. கே. இராஜநாயகம் யாழ். செயலக ஓய்வூதியக்கிளை கணக்காளர் என்பது குறிப்பிடத்தக்கது. [153]

# தேடுதல் நடத்திய இராணுவம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் பல கிராமங்களில் தேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் திருக்கழுமடு, சிங்கபுர, கதிரவெளி, வாகரை ஆகிய ராணுவ முகாம்களிலிருந்து காட்டுப் பாதையூடாக வெளியேறிய இராணுவத்தினர் இப்பகுதிகளில் பலத்த தேடுதல் வேட்டையை நடத்தினர்கள்.

இதன்பின் ஆண்டான்குளம் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் மீது புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்கள்.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (க)

## கொழும்பில் சிகிச்சைபெறும் நோயாளர் நாளை பயணம்

(யாழ்ப்பரணம்)

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் காரியாலயத்தில் கொழும்பில் சிகிச்சை பெறுவதற்குப் பதிவு செய்யப்பட்ட நோயாளர்கள் நாளை புதன்கிழமை குமண கப்பலில் கொழும்பு செல்லவுள்ளார்கள்.

இந்த நோயாளர்களும் அவர்களின் உதவியாளர்களும் நாளைக்காலை ஆறு மணிக்கு குடிநீர் மற்றும் உணவுப் பொருட்களுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். [56]

## மூதாட்டியை காப்பாற்றிய இளைஞர்

[யாழ்ப்பாணம்]

சுவாமியார் வீதியில் தவறுதலாக கிணற்றில் விழுந்த மூதாட்டி ஒருவர் அவ்வூர் இளைஞர்களினால் காப்பாற்றப் பட்டார்.

ஆழமான கிணறு ஒன்றில் நேற்று முன்தினம் விழுந்த மூதாட்டி இப்பகுதியிலுள்ள யோகன் என்னும் இளைஞன் முயற்சியினால் எவ்வித காயமுமின்றி காப்பாற்றப்பட்டார்.

## கூட்டுறவு சங்கங்களை புனரமைக்க விசேட நிதி

(மாங்குளம்)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பதற்கு விசேட நிதியாக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. சி. த. மார்க்கண்டு தெரிவித்தார்.

வவுனியா கூட்டுறவுச் சங்கத்திற்கு 7 லட்சம் ரூபாவும், வவுனியா தெற்குச் சங்கத்திற்கு 3 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டும், சேதங்களுக்குள்ளானதுமான கூட்டுறவுச் சங்கங்களையும் புனரமைக்கவேண்டியதன் அவசியத் தேவைகள் குறித்து உணவு கூட்டுறவுச் செயலர், மத்திய கூட்டுறவு ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோருக்குவவுனியா அரசாங்க அதிபர்தெரிவித்து விடுத்தவேண்டுகோளை அடுத்தே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை செட்டிகுளம், நெடுங்கேணி போன்ற பகுதிகளுக்கும் அவ்வப்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மண்ணெண்ணெயைக் கொண்டு சென்று கிளைகளின் ஊடாக விற்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். [150]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுல்செய்யப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு, இன்று காலை 6-00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (க)

## 'தமிழீழ மாணவர்'

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'தமிழீழ மாணவர்' நேற்று வெளியிடப்பட்டது.

## முத்திரைக்கு பொருட்கள்

(பூநகரி)

கடந்த ஞாயிறு தொடக்கம் மாசி மாதத்திற்கான பாடசாலை முத்திரைகளுக்கு பூநகரி பலநோ. கூ சங்க கிளைகளில் அரிசி, சீனி, பயறு, உளுந்து, கருவாடு, கோப்பி, பெண்சில் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன (23)

## சணல் தண்டு கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படும் சணலின் விதை எடுத்த பின்பு எஞ்சியிருக்கும் சணல் தண்டுகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

விவசாயிகள் அறுவடை செய்த சணல் தண்டுகளை, தங்கள் பகுதி சமநலச் சேவை நிலையங்களில் கொடுத்தும் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (க)

## படையினரால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஜீவரட்ணம் துஷ்யந்தன் (வயது 20), கனகசபை சுந்தரராசா (வயது 35) ஆகியோரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களாவர் (க)

## காரைநகர் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பாடசாலைகளில் 11 ம் ஆண்டில் 1990 - ம் ஆண்டு கல்வி கற்றவர்கள். க. பொ. த உயர்தர வகுப்புக்கு அனுமதிப்பதற்கான பரீட்சையில் தோற்ற உள்ள மாணவர்கள் தமது பெயர்களை நாளை 15-ம் திகதிக்கு முன்னர் நாவலர் மகாவித்தியாலயத்தில் தினமும் பி. ப. 12 - 00 — 2-00 பதிவு செய்யுமாறு கொத்தணி அதிபர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை அடுத்த சில தினங்களில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளஸ்ரோன் தெரிவித்த புகார் ஐ தே. கட்சி வட்டாரத்தில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதும் தெரிந்ததே. [கி]

## இடம்பெயர்ந்தோர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலைந்திருந்த தபாலகங்கள் மீண்டும் செயல்பட்டுவருகிறது

வெளியேறியவர்களது கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகிக்க முடியாது தபால் அலுவலகங்களில் தேங்கிக்கிடக்கின்றன. விலாசங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்தினால் அக்கடிதங்களை உரியவர்களுக்கு அனுப்பி வைக்க முடியுமென தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [150]

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் ஆறு வருடங்கள் ஆட்சியில அமர்ந்திருக்கவும் ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடும் எனவும் ஏஜென்ஸி செய்திகள் மேலும் தெரிவித்தன. (ரி)

## கரை ஒதுங்கிய சடலம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு, கண்ணகை அம்மன் கோவில் கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியது

இச்சடலம், நெற்றியிலும், முதுகிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டது. (101)

## மடு கோயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடுகோயிலில் அகதிகளுக்கு 3 கிழமைக்கு தேவையான உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருப்பதாக அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் புதன்கிழமையிலிருந்து மன்னார் அரச அதிபரும் மன்னார் மேலதிக அரச அதிபரும் மடுக்கோயிலில் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது. (153)

## அவ்ரோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு சொந்தமான அவ்ரோ விமானம் ஒன்று 15 பீப்பாக் குண்டுகளை இயக்கச்சி பகுதியில் வீசியுள்ளது. இவற்றுள் இரு பீப்பாக் குண்டுகள் வெடிக்கவில்லை.

இதேவேளையில் ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி அவ்ரோவிமானத்திலிருந்து 25க்கும் மேற்பட்ட பொதிகள் போடப்பட்டதாகவும் அவற்றுள் பெரும்பாலான பொதிகள் இராணுவ முகாமிற்கு வெளியே விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேதினம் இப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிற்பகல் 3-30 மணியளவில் 2 பொம்மர்கள், 2 ஹெலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதுடன், காலை 10-30 மணி முதல் பிற்பகல் 5-30 மணி வரை ஹெலியிலிருந்து கடுமையான ஷெலியர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (க)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மக்கள் முன்னணி காரியாலய கிணற்றுள் குதித்து குப்புசாமி இராமசாமி [43 வயது] கப்பூதூர் என்பவர் தற்கொலை செய்து கொண்டார்

பிரஸ்தாப நபருடைய மனைவியாலும் மகளினாலும் இவருடைய துர்நடத்தை பற்றி தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை விசாரிப்பதற்கா மேற்படி காரியாலயத்தில் இவர் தங்கவைக்கப்பட்டபோது இவர் தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது

## பென்சன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளன.

தீவகப் பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் பென்சன் வவுச்சர்கள் இது வரை எந்த வங்கியில் பென்சனை எடுத்தார்களோ அந்தவங்கிகளுக்கு பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகத்தினால் அனுப்பப் படவிருக்கிறது.

யாழ். நகரிலுள்ள வங்கிகளில் ஒய்வூதியம் பெறும் தீவக ஓய்வூதியர்கள் தமது ஏப்ரல் மாத பென்சன் வவுச்சர்களை யாழ். செயலகத்தில் இயங்கும் தற்காலிக வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

35 படையினர் உயிரிழந்ததுடன், 17 படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இதுவரை அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டமும் இன்று காலை 6-00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 2ந் திகதி முதல் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது தெரிந்ததே. (சி)

## உதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக சேவையின் தரம் IIல் தெரிவுசெய்யப்பட்டவர்களில் ஐந்து பேரை இதற்கென யாழ். மாவட்டத்திற்கு அனுப்பியுள்ளது.

திரு. கே. கேதீஸ்வரன், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபராகவும், திரு எச். யோசேப் தீவுப்பகுதி வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகவும், [செல்வி பி. லோஜினி வலிகாமம் தெற்கு. உடுவில் உதவி அரசாங்க அதிபராகவும், திரு. என். வேதநாயகன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராகவும், திரு. எல். இளங்கோவன் தீவுப்பகுதி தெற்கு, வேலணை உதவி அரசாங்க அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (153)

## யாழ். போதனா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரேட்டர் இயந்திரம் தற்போது முற்றாக பழுதடைந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இந்த ஜெனரேட்டரை திருத்துவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஜெனரேட்டரின் சில பகுதிகளை திருத்துவதற்கு கொழும்புக்கு அனுப்பவேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது. தற்போது 27.5 கே. வி ஜெனரேட்டர் இயந்திரம் மட்டுமே போதனா ஆஸ்பத்திரிக்கான மின்சாரத்தைவழங்கி வருகிறது.

இதனையடுத்து வாட்டுகளில் மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)


# கடற்புலிகளின் எழுச்சி நாளும் மாபெரும் பொதுக்கூட்டமும்

காலம்: 14-05-1991 (செவ்வாய்க்கிழமை)

நேரம்: மாலை 6-00 மணி

இடம்; வலிகாமம் மேற்கு வட்டு. இந்துக்கல்லூரி.

தென்மராட்சி மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மைதானம்.

வடமராட்சி வல்வெட்டி நெடியகாடு விளையாட்டுக்கழக மைதானம்.

அனைத்து தமிழீழ மக்களையும் கடற்கரும்புலிகளின் நினைவு நாளில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(ஏ-1301)



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/100806/81.